**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC -29/2023**

**வழக்கு சாட்சி : LW8(PW6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயஸ்ரீ | தொழில் | : | காவல் ஆய்வாளர் , ஏர்போர்ட் குற்ற பிரிவு , திருச்சி |
| தந்தை பெயர் | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(1 ம் எதிரி ஆஜர் . 2,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on** the **day 23th day of February 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :-</u>**

1. நான் தற்போது காவல் ஆய்வாளராக ஏர்போர்ட் குற்ற பிரிவு , திருச்சியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2021 ம் தேதி காலை 10.00 மணிக்கு அன்னவாசல் காவல் உதவி ஆயவாளராக நிலைய பொறுப்பில் இருந்போது கடந்த 08.10.2021 ம் தேதி காலை 07.00 மணிக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலினைப் பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கோகுறிச்சிப்பட்டியை சேர்ந்த வீரசேகர் மனைவி நிரோஷா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அன்னவாசல் காவல் நிலையம் வந்து நிலைய மனு எண். 546/2021 கொடுத்து மனு விசாரணைக்கு பிறகு மேற்சொன்ன நிலைய பொறுப்பில் இருந்த தேதியான அன்றைய தினமே அன்னவாசல் நிலைய குற்ற எண். 688/2021, இதச பிரிவுகள் 294 (b), 323,324,506(2) r/w. 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். என்னால் பதிவு செய்யப்பட்டட **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குகறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை சமூகம் நீதிமன்றத்தாருக்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2. அன்றைய தினமே காலை 11.30 மணிக்கு சம்பவ இடமான கோனகுறிச்சிபட்டி வாதியின் வீட்டின் முன்பு சென்று சாட்சிகள் கண்ணையா மற்றும் முருகேசன்

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளிடம் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. சம்பவ இடத்தில் இருந்து எதிரிகள் பயன்படுத்திய 3 அடி நீளமுள்ள கருவைக் கட்டை ஒன்றை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி தடயத்தை படிவம் 91 ன் மூலமாக சமூகம் நீதிமன்றத்தாருக்கு அனுப்பி வைத்தேன. **என்னால் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** படிவம் 91 ன் மூலம் சமூகம் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட வழுனககின் தடய பொருள் சி.பி.எண். 9 ஆகும். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்ப்படுகறிது. அந்த 3 அடி நீளமுள்ள கருவைக் கட்டை ஒன்று அ.சா.பொ.ஆ. 1** ஆகும்.

4. பின்னர் சாட்சிகள் கண்ணையா, முருகேசன் , நிரோஷா, வாசுதேவன் , நாகவேணி, விநாயகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் விசாரணை மற்றும் என்னுடைய தனிப்பட்ட விசாரணையில் சம்பவம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் எதிரியை கைது செய்ய எதிரிகளை தேடி வந்த நிலையில் மாண்புமிகு புதுக்கோட்டை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தக்க முன் ஜாமீனில் சென்றுள்ள விவரத்தை அறிந்து, மேற்படி சாட்சி 1 க்கு சிகிச்சை அளித்த புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூாி மருத்துவமனை மருத்துவர் ஆனந்தகுமார் என்பவைரை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் . பின்னர் என்னுடைய விசாரணையில் நிரோஷா என்பவரை 2 வது எதிரி செருபாபல் அடித்த விவரத்தை அறிந்து இவ்வழக்கிக் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சட்டபிரிவுகளுடன் இதச பிரிவுகள் 355 னுடன் சேர்த்து பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து இத்துடன் எனது விசாரணையை முடித்து பிரிவு மாற்று அறிக்கையுடன் சமூகம் நீதிமன்றத்திறகு குற்ற இறுதி அறிக்கை அனுப்பி வைத்தேன். **அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 10 ஆகும்.**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

1. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி மற்றும் நேரம் 07.10.2021 ம் தேதி நேரம் காலை 06.00 மணி என்றால் சரியல்ல, மாலை 06.00 மணி ஆகும். சம்பவம் குறித்து எந்த தேதியில் , எத்தனை மணிக்கு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் 08.10.2021 ம் தேதி காலை 07.00 மணிக்கு தகவல் கிடைத்தது. 08.10.2021 ம் காலை 07.00 மணிக்கு தகவல் கிடைக்கப் பெற்றது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவத்திற்கு பிறகு மூன்று நாட்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், மனு எண். 546/2021 என்று கொடுதது மனு விசாரணைக்கு பிறகு பதிவு செய்யப்பட்டது.

2. மனு எண். 546/2021 அதற்கான மனு ரசீதையோ, அதன் நகலையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனு எண். 546/2021 ஐ 09.10.2021 ம் தேதி வழங்கியதாக அ.சா.1 கொடுத்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த மனு ரசீதை யாரிடம் வழங்கினேன், யாரிடம் கையொப்பம் பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. அ.சா.1 மருத்துவமனயைல்

இருந்ததால் அவ்வாறு மனு எதுவும் வழங்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல . முதல் தகவல் அறிக்கையில் காலம் எண் 8 ல் தாமத்திற்கான காரணம் சொல்லவில்லை என்றால் சரியல்ல, தாமதத்திற்கான காரணம் சொல்லப்பட்டுள்ளது, மனு எண். 546/2021 கொடுத்து மனு விசாரணைக்கு பிறகு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. 08.10.2021 ம் தேதி தகவல் கிடைத்து 09.10.2021 ம் தேதி தான் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள நிலையில் கால தாமதத்திற்கான காரணம் குறித்து தனி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 09.10.2021 ம் வாக்குமூலம் கொடுத்ததற்கு பின்னிட்டு 10.10.2021 ம் தேதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் கால தாமதத்திற்கான காரணம் குறித்து தனி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 எந்த வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்ற விவரத்தை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றாலும், அந்த வாகனம் யாருடையது என்ற விவரத்தையும் விசாரித்து தெரிந்த கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல, வாதியின் உறவினர் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றதாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

4. 108 ஆம்புலன்ஸ் ஓட்டுநரையோ, அதில் பணி செய்தவர்களையோ விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அது வழக்கிற்கு தேவையில்லை என்பதால் விசாரிக்கவில்லை. 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு சென்றிருந்தால் அது குறித்து விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அது பற்றி குறிப்பிடாததை பற்றி அ.சா.1 னிடமோ, மருத்துவரிடமோ விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் அவ்வாறு 108 ஆம்புலன்சில் சென்றதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும் அது பற்றி புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதற்காக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் என்னுடைய விசாரணையில் நிரோஷா என்பவரை 2 வது எதிரி செருப்பால் அடித்த விவரத்தை அறிந்து இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சட்டபிரிவுகளுடன் இதச பிரிவுகள் 355 னுடன் சேர்த்து பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். சான்று பொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகாரில் அ.சா. 1 நிரோஷா வை எதிரிகள் செருப்பால் தாக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்து என்றாலும் சரியல்ல. அ.சா. 1 அவரது புகாரில் 1 வது எதிரி வரம்பு மீறி நடந்ததால் தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், 2 வது எதிரி தான் செருப்பால் அடித்ததாக குறிப்பிட்டுள்ளார். ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை , மகன், மற்றும் மகள் ஆகீயோர்கள் சேர்ந்து ஒரு பெண்ணிடம் வரம்பு மீறி நடந்ததாக கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் இட்டுள்ள 1 வது சாட்சி கண்ணையாவிற்கு ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யும் வழக்கம் இல்லை என்றால் சரியல்ல கைப்பற்றுதல் மகஜரில் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்துள்ளார். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் 1 வது சாட்சி கண்ணையாவிடையது இல்லை என்றால் சரியல்ல.

6. சான்றுப் பொருள வழக்க சம்பவம் இடத்தில் கைப்பற்றபடவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களான மாதிரிவரைபடம், பார்வைமகஜர், வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன தேதியில் , மேற்சொன்ன இடத்தில் அ.சா.1 மற்றும் அவரது தரப்பினர்கள் இந்த எதிரிகளை  தாக்கியதாக அவர்கள் மீது குற்ற எண். 689/2021 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.